[2001 ஜனவரி 23

பள்ளிகளிலும் இது வந்துவிடுமானால் புதிதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற அவசியமே இருக்காது என்று கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

27—

குறைந்த குத்தகைக்கு வனத் துறை நிலங்கள்

***25513**—டாக்டர் க. கிருஷ்ணசாமி:

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில், திருநெல்வேலி மாவட்டம்-மாஞ்சோலை, தேனி மாவட்டம்-ஹைவேவிஸ், கோயம்புத்தூர் மாவட்டம்-வால்பாறை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில், தேயிலை, காப்பி, ஏலம் போன்ற பணப் பயிர்கள் விளைவித்து வரும் பி.பி.டி.சி., டாட்டா, பிர்லா, இந்துஸ்தான் லீவர், பாரி அக்ரோ, என்.இ.பி.சி., சக்தி போன்ற நிறுவனங்கள் குறைந்த குத்தகையே கொடுத்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அதிகப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பி.பி.டி.சி. நிறுவனத்திற்கு 1929 முதல் 99 ஆண்டுகளுக்கு ஏக்கர் ஒன்றிற்கு, ஒரு ஆண்டிற்கு ரூ. 35 வீதம் 8,373 ஏக்கர் நிலம் குத்தகையில் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற நிறுவனங்களுக்கு தேனி மாவட்டம் ஹைவேவிஸ், கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறை ஆகிய இடங்களில் வன நிலங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை.

(ஆ) ஒப்பந்த விதிகளின்படி பி.பி.டி.சி. நிறுவனத்திற்குக் குத்தகைத் தொகையை உயர்த்த சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது முதன்மைத் தலைமை வனப் பாதுகாவலரால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2001 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை, திரு. பா.மு. முபாரக்.

திரு. பா.மு. முபாரக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, நீலகிரி, வால்பாறை போன்ற பகுதிகளில் நீண்ட காலமாக பெரிய தேயிலைத் தோட்ட எஸ்டேட்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு வந்தது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் டாட்டா, பிர்லா போன்றவர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், கூடலூரில் சுமார் 15,000-க்கும் மேற்பட்டவர்கள் 1 ஏக்கர், 2 ஏக்கர் என்கிற அளவில் வனத் துறை பாதுகாப்பில் உள்ள நிலங்களை சுமார் 20, 30 ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கும் இதேமாதிரி சலுகை குத்தகை அடிப்படையில் உதவி செய்து அந்த ஏழைகளை இந்த அரசு பாதுகாக்க உதவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நீலகிரி மாவட்டம் கூடலூர் போன்ற இடங்களிலே டாட்டாவிற்கும், பிர்லாவிற்கும் வனத் துறை நிலங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை. நீலகிரியில் இருக்கிற நிலங்கள் வேறு. அது அவருக்கே தெரியும். ஜென்ம பூமி, Non-ஜென்ம பூமி, என்று அதாவது ஜமீன் பூமி என்றும் மற்றது எல்லாம் கோவில் நத்தம், கிராம நத்தம் என்றும் அவை பல்வேறு நிலங்கள்; அவை வனத் துறைக்குரியவை அல்ல; ஆனால், வனத் துறைக்குரியவை சிறு, சிறு நிலங்கள் விடப்பட்டிருந்தன. அவை எல்லாம் எடுக்கப்பட்டு 63 ஹெக்டேர் மட்டும்தான் இருக்கிறது. அதுவும் வழக்கிலிருக்கின்றது. 13 பேர்களிடத்திலே தேனி, மதுரை, கம்பம், போடி போன்ற பகுதிகளில் இருக்கிற நிலங்கள் அவை. பொதுவாக வனத் துறையிலிருந்து விடப்பட்டவை மாஞ்சோலையில் இருக்கிற, அந்த எஸ்டேட்டிலே இருக்கிற 8,373 ஏக்கர் நிலங்கள்தான். ஆனால், இரண்டாவது ஒரு கேள்வி கேட்டார் முபாரக் அவர்கள். ஏழைகளுக்கு அப்படிப்பட்ட நிலங்கள் தரப்படுமா என்று. எஸ்டேட் லேண்டில் இருப்பவை வனத் துறைக்குத் தேவையில்லாமல் இருக்குமானால், வன உயிர்ப் பாதுகாப்பு என்பதன்கீழ், வன விலங்குகள் இருக்கிற அந்த ஏரியாவிலே —wild forest area—அவை வராமல் இருக்குமானால், தேவையில்லை என்று அரசு கருதுமானால் இப்படிப்பட்டவர்களுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுப்பதைவிட ஏழைகளுக்குத் தருவதை இந்த அரசு யோசிக்கும்.